# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 02 - நேரம்:30 நிமிடம்

## விடைப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

**வினாத்தொகுதி:01**

**(i) பாடலின் பேசு பொருளை (துறை) குறிப்பிடுக.**

* தலைவியோடு கொண்ட உறவை மறவாது அவளை விரைந்து வந்து மணம் செய்து கொள்ளுமாறு தோழி தலைவனுக்கு வற்புறுத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(ii) மேல்வரும் சொற்களுக்கான பொருளை எழுதுக.**

* முன்றில் - முற்றம்
* கெட்டித்து - கேடு நேர்ந்த இடத்து,
* கலிமயில் - ஆரவாரம் மிக்க மயில்
* கலாபம் - தோகை, பீலி,

**(04 புள்ளிகள்)**

**(iii)"தலைவன் தலைவியை விட்டு பிரிதல் அறமன்று" எனும் கருத்து தொணிக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.**

* தான் பலமிழந்து இருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின், தனக்கு முன்னர் உதவியவர்களை மறந்து விடுகின்ற மன்னர்களைப் போல நீ நன்றி மறந்தவனாக அமையவில்லையெனில் தலைவியின் நலமெல்லாம் (கூந்தல் முதலிய எல்லாம்...) உனக்கே உரியதாகும். எனும் தோழியின் அறிவுரையில் **தலைவன் தலைவியை விட்டு பிரிவது அறமன்று** என்ற கருத்து தொனிக்கின்றது. எனவே நன்றி மறவாது செயற்படுவதே உயர்ந்த அறமாகும்.

**(04 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:02**

**(i) பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணியினை எடுத்து விளக்குக.**

* உவமை : ''கலிமயிற் கலாவத் தன்ன இவள் ஒலி மெல் கூந்தல்''

உவமானம் : கலிமயிற் கலாவம் : மென்மையானதும் ஆரவாரிக்கும் தன்மையானதுமான மயிலின் பீலி (இறகு) உவமேயம் : ஒலி மேல் கூந்தல் : தலைவியின் தழைத்து செழித்த நீண்ட கூந்தல் பொதுத் தன்மை : மென்மையும் தழைத்து செழித்து நீண்டிருக்கும் அழகும்.

* அரசன் ஒருவன் பலமிழந்திருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின் தனக்கு முன்பு உதவியவர்களை மறந்துவிடும் மன்னன் போல என **உவமை** நன்றி மறந்தவனாக தலைவன் தலைவியை விட்டுப் பிரிவது அறமன்று என்பது புலப்படுத்தப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(ii)** **தலைவனின் மன நிலையினை எடுத்துக்காட்டுக.**

- தலைவன் தன் சுற்றத்தை பயன்பட வாழ வைப்பதுடன் தலைவியின் அழகை அளவாக தானும் அனுபவிக்கும் எண்ணம் தொனிக்கின்றது.
- தனக்கு இன்பம் வழங்கியவர்களை நன்றி மறந்தவனாக தலைவன் காணப்படுவது.

**(04 புள்ளிகள்)**

**(iii)** பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

- முதல்: மலைசார்ந்த குறிஞ்சி எனும் நிலம்
- கரு: யானை, திணை, மயிலின் பீலி முதலிய கருவும்
- உரி: குறிஞ்சி நிலத்துக்குரிய புணர்தல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.

**(04 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i)** **<u>தோழியின் மதி நுட்பம் இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றதெனக்குறிப்பிடுக.</u>**

* **தலைவனின் ஆற்றலை யானையின் செயலுக்கு உவமித்து இறைச்சியூடாக** குறிப்பின் மூலம் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளாள்.

* தலைவன் நன்றி மறக்காது தனக்குரிய கடமையினை செய்ய வேண்டுமென்று தனது கருத்தை வலியுறுத்துவதாக தோழியானவள் **உவமை மற்றும் இறைச்சி** என்பவற்றை கையாண்டு விளக்கியுள்ளாள்.

* பெண்யானை முற்றத்து தினையை தின்றபடியே தன் கன்றுக்கும் பாலூட்டுகிறது. அங்கனமே தலைவனாகிய நீயும் 'பொருள் தேடி தன் உறவுகளை போசித்து பாதுகாத்து கடமையை நிறைவேற்றுவதோடு இவளது நலனையும் பேண வேண்டும்' எனனும் **குறிப்பு தோன்ற** வலியுறுத்துகிறாள்.

* தலைவனே நீ இதுவரை தலைவியுடன் அனுபவித்த நலன்களை மறந்தவனாக அவளை விட்டுச் சென்று விடாமல் அவளை மணமுடித்து இல்லறம் நடத்துவாயாயின் அவள் மகிழ்வாள். அழகோடு துலங்குவாள் அவளது அழகு உனக்கு உரியதாய் அமையும். எனினும் நீ பிரிவாயாயின் அவள் துன்புறுவாள். அழகு இழப்பாள். அவளது அழகு உனக்கு உரிமை இல்லாததாக ஆகிவிடும் என்று **அழகைகை அனுபவிக்கும் உரிமையைச் சுட்டுகிறாள்.**

* அரசன் ஒருவன் பலமிழந்திருந்த காலத்தில் பிறரின் உதவியைப் பெற்று அரசு கட்டில் ஏறிய பின் தனக்கு முன்பு உதவியவர்களை மறந்துவிடும் மன்னன் போல என **உவமை கூறி**, நன்றி மறந்தவனாக நீ அமையவில்லை எனின் தலைவியின் நலமெல்லாம் உனக்கு உரியதாகும். எனும் தோழியின் அறிவுரையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவது அறமன்று என்ற கருத்து தொனிக்கின்றது. இதன் மூலம் தலைவன் தலைவியை விரைவாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவனது கடமையினையும் பொறுப்பையும் வலியுறுத்துகிறாள்.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலில் இறைச்சி பொருள் விளக்கப்பட்டுள்ளவாற்றை எடுத்துக்காட்டுக.**

* ''கன்றுதன் பயமுலை மாந்த முன்றில் திணை பிடி உண்ணும் பெருங்கல் நாட'' : பெண் யானை தன் கன்றுக்கு பால் கொடுத்து தானும் திணைக்கதிர்களை உணவாக உண்டு தன் பசியை போக்குகின்றது.

| **இறைச்சியின் பண்புகள்** | **வெளிப்படும் பண்புகள்** |
|---|---|
| பறவை, விலங்கு முதலிய உயிரினங்களின் செயல் மூலம் ஒரு குறிப்பை உணர்த்துவது | பெண் யானையின் செயல் |
| தலைவனின் கொடுமை, இயல்புகள் கூறும் இடங்களில் பயன்படுவது | தலைவன் தன் சுற்றத்தை பயன்பட வாழ வைப்பதுடன் தலைவியின் அழகை அளவாக தானும் அனுபவிக்கின்றான் எனும் தலைவனின் பெருமை தொனிக்கின்றது. |
| ஒன்றைச் சொல்லும் போது இன்னொன்று நினைவுக்கு வரும் | யானையின் செயல் கூறல் : தலைவன் பொருளீட்டுவதுடன் தலைவியின் நலனையும் பேணி அவளையும் திருமணம் செய்ய வேண்டும் |
| மன ஆசையை ஆற்றாமையை வெளிப்படுத்தும் நோக்கம் உள்ளது. | தலைவன் தலைவியை விரைந்து வரைந்து கொள்ள (திருமணம் செய்தல்) வேண்டும் |
| கேட்போர் இல்லாத சூழலில் பயன்படுத்தப்படுவது | தலைவி இவ்விடத்தில் இல்லாதபோது தலைவனுக்கு கூறப்பட்டது. |

**(04 புள்ளிகள்)**

**(iii)இப்பாடலில் வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகளை எடுத்துக்காட்டுக.**

* குறிஞ்சி நிலத்துக்குரிய புணர்தல் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது.
* குறிஞ்சி எனும் முதலும் யானை, திணை, மயிலின் பீலி முதலிய கருவும் புணர்தல் எனும் உரியும் வெளிப்படுகிறது.
* திருமணத்தை முன்னிறுத்தி தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனுக்கு தோழி சொல்லிய துறை.
* பெயர்சுட்டாத தோழி கூற்றாகவும் அமைந்துள்ளது.
* இறைச்சி எனும் குறிப்பும் பொருளும் பயன்படுத்தப்பட்டது. பெண்யானை கன்றுக்குப் பாலூட்டியவாறு தினையை உண்பது போல தலைவனும் தலைவியின் நலனைப் பேணி அவளை விரைவாக மணம் முடிக்க வேண்டும்.
* ''நன்றி மறவாது செயற்படுவதே உயர்ந்த அறமாகும்'' எனும் அறக்கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
* ஒரு பாடலில் ஒரு ஒழுக்கம் எனும் குறிஞ்சி நிலத்திற்குரிய புணர்தல் ஒழுக்கம் தனியொரு செய்யுளில் கூறப்பட்டுள்ளது.
* அகவல் பாவால் ஆன ஏழு அடிகள் உள்ள (சீர்கள்) பாடலாக அமைந்துள்ளது.

**(04 புள்ளிகள்)**